DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

| | |
|---|---|
| Case No. | : C. C. No. 13/2024 |
| Prosecution Witness | : P. W. 11 |

| | | | |
|---|---|---|---|
| Name | : சித்ராதேவி | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 10/10/2025

Accused absent.

முதல் விசாரணை (அரசு தரப்பில்)

நான் தற்போது அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் மருத்துவ உதவி பேராசிரியராக அவரச சிகிச்சை பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.01.2023 பிற்பகல் 3.30 மணியளவில் பணியிலிருந்த போது சுமார் 70 வயது மதிக்கத்தக்க லலிதா என்பவர் 108 ஆம்புலன்சில் மூலம் வந்தவரை பரிசோதித்த போது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு இடது கை புஜம், இடது பாதம் அடிபட்டிருந்தது. அவரை பரிசோதித்து உள்நோயாளியாக அனுமதிக்குமாறு பரிந்துரை செய்தேன். செங்குன்றம் பேருந்து நிறுத்தம் அருகே அடையாளம் தெரியாத பஸ் மோதி விபத்து ஏற்பட்டதாக என்னிடம் கூறினார். நான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை எண்.857398 ஆகும். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டு அறிக்கை நான் வழங்கியது தான். **அது அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

SHANKARAN MANJULA — Digitally signed by SHANKARAN MANJULA

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

நான் முதலுதவி சிகிச்சை அளிக்கும் போது சுயநினைவுடன் தான் விபத்தில் சிக்கிய நபர் இருந்தார் என்றால் சரிதான். அடையாளம் தெரியாத பேருந்து என்று மட்டும் தான் சொன்னார்கள். அரசுப் பேருந்தா தனியார் பேருந்தா என்று தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA